


மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டு நாமக்கல் மாநகராட்சி மன்ற தீர்மானம் எண் - 132, நாள் : 30.01.2026 இணையும், அணையர், நாமக்கல் மாநகராட்சி அவர்களின் கொகிரஹ அ1/அ2 எண். 5969/2025/மஇ3-1, நாள் :04.02.2026 இணையும், உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் எண். NMBNBVRY/53810/2025/TCP/2025/TCP, நாள் : 10.10.2025 இல் பெறப்பட்ட மனை பிரிவு திட்ட நிபந்தனைகள், அரசு நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்கு உட்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது.

ஆணையாளர்
நாமக்கல் மாநகராட்சி
04/02/26

தே.புவனேஸ்வரி
அளவர் / உதவி வரைவாளர்

ச.சுரேந்திரன்
வரைவாளர் நிலை-II

பொ.யமுனாதேவி
மேற்பார்வையாளர்

Signature valid

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) நாமக்கல்.

நாமக்கல் மாநகராட்சி

நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல் மாநகராட்சி மற்றும் ரெட்டிப்பட்டி கிராமம், க.ச.எண்.224/4B1A, 225/1A-ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

வ

இணையதள விண்ணப்ப எண் : NMBNBVRY | நாள் : 08.09.2025 | அளவு : (1:500)

குறிப்பு:

மனைப்பிரிவின் பரப்பு : 2.41 ½ ஏக்கர் (அ) 9775.00ச.மீ
ஒதுக்கிய மனைகள் : 31
மனைப்பிரிவின் எல்லை .....
நிலையிலுள்ள சாலை/அணுகு சாலை .....

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

(அ)உத்தேச சாலைகள் பரப்பளவு - 3095.31 ச.மீ

(ஆ)ஒதுக்கப்பட வேண்டிய 10% பூங்காவிற்கானபரப்பு
- (மனைப்பிரிவின் மொத்தபரப்பு - சாலைகளின் மொத்தப்பரப்பு) x (10 /100)
= 9775.00-3095.31 = 667.97 (10.0 %)
(அரசானை எண் 18-ன், நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 4.2.2019-ன் படி அரசு வழிக்காட்டி மதிப்பின்படி OSR பரப்பிற்கு தொகை செலுத்தப்பட்டது.)

II. பொது ஒதுக்கீடுகள் :

(உத்தேச சாலை பரப்பளவு நீங்களாக மீதமுள்ள மனைப்பிரிவு பரப்பளவிற்கு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.)

மனுதாரரால் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை
(ஆவண எண்:3924/2025 நாள:08.10.2025)

சாலை மற்றும் மூலை முடக்குகளின் பரப்பு : 3095.31 ச.மீ

பொது உபயோகம் (TNCDBR,47(8)-ன் படி 1% ஒதுக்கீடு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

உள்ளாட்சிக்கான பொது ஒதுக்கீட்டின் பரப்பளவு
(ஆவண எண்:3924/2025 நாள:08.10.2025) : 36.60 ச.மீ (0.55%)

TANGEDCO-க்கு ஒதுக்கீட்டின் பரப்பளவு
(ஆவண எண்:3923/2025 நாள:08.10.2025) : 37.70 ச.மீ (0.56%)

மூலை முடக்கு: 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீx1.5மீ-ம் விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:

1.இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத் துறையாலும் நில ஆழ்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நில ஆழ்ஜுப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்ய வேண்டும்.

2.அரசாணை எண்.18,16 - ன் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கள் துறை நாள் 04.02.2019 (ம) 31.01.2020- ன் படி விதிகள் அனைத்தும் பொருந்தும்.

3.அரசாணை எண் 181 - ன் ஊரக வளர்ச்சி துறை நாள் 19.12.2020 - ன் படி நில உரிமம் குறித்து உள்ளாட்சி நிர்வாக அதிகாரி முழு திருப்தியில் உள்ளது என சான்றழித்தின் பேரில் இம்மனைப்பிரிவிற்கு தொழிலநுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டது.

4.நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் மனைப்பிரிவிற்குத் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கியதில் ஏதேனும் பாதிப்பு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு இயக்குனர்/ஆணையர் அவர்களால் இரத்து செய்யப்படும்.

5.விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யுமபோது இவ்வனையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடங்களையும் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6.நகர் ஊரமைப்புத்துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி/ திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம்,குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதார் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்திலிருது உள்ள உரிமையை தனியாக உறுதிபடுத்துக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் நிருபுக்கொள்ளலாம். இதனை முழுவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

7.ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தினை எவ்வித மாற்றமும், விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6X4 அளவிலான தகவல்பலகை முலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.

8.உத்தேச மனைப்பிரிவு அமையும் நிலம் தொடர்பாக நீதிமன்ற வழக்கு ஏதேனும் நிலையில் இருப்பின் இத்துறையின் அனுமதி செல்லத்தக்கது அல்ல.

9.உத்தேச மனைப்பிரிவின் ஊடே நீரநிலைகள் அமையுமாயின் அதற்கு பாதிப்பு ஏற்படாதவாறு கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

10.உத்தேச மனைப்பிரிவின் ஊடே POWER LINE, HT LINE, LT LINE, AND TELEPHONE LINE ஆகியன செல்லுமாயின் அவைகள் சாலையின் போக்கிற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

11.உத்தேச மனைப்பிரிவு இடத்தில் கட்டிடம் கட்டும் போது உரிய விதிகளை பின்பற்றி உரிய அனுமதி பெற்று கட்டப்பட வேண்டும்.

12.உத்தேச மனைப்பிரிவில் எந்தவித மாற்றம் செய்வதாக இருந்தாலும் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

13.உத்தரவு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள் (ம) மனைப்பிரிவு நிபந்தனைகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.

SWP/ DTCP/ NAMAKKAL / LAYOUT NO. 247/2025

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
நாமக்கல்